31st March 1964]

(அ) ஆம்.

(இ) 1963-64-ம் ஆண்டுக்கான அனைத்திந்திய சர்க்கரை உற்பத்திக் குறியளவான 33·00 லட்சம் டன்களில் இந்த மாநிலத்திற்கு 1,40,000 டன் சர்க்கரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது இம்மாநிலத்திலுள்ள பற்பல சர்க்கரை ஆலைகளுக்கிடையே ஏற்றவிதமாக பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளது. இக்குறியளவினை சாதித்துவிடலாம் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

Veterinary College

* 463 *Q.*—SRI M. KALYANASUNDARAM AND SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to open another Veterinary College in the State;

(*b*) if so, the year in which and the place where it is proposed to be opened; and

(*c*) the present stage of the proposal to start a Veterinary College in Tiruchirappalli district?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) The necessity for opening a second Veterinary College in the State is being examined by the Government.

(அ)—(உ) இந்த மாநிலத்தில் மேலும் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியைத் திறப்பதற்கான அவசியத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : பரிசீலனை முடிவு பெற்று கால்நடை வைத்தியக் கல்லூரி ஏற்படும்பொழுது, திருச்சிராப்பள்ளியில் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை செய்து பின்னாலே எந்த ஜில்லாவில் எந்த இடத்தில் வைப்பது என்பது பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : ஏற்கனவே விவசாயக் கல்லூரி மதுரையிலே ஆரம்பிக்கிற காரணத்தினால், அதையொட்டி கால்நடை மருத்துவக் கல்லூரியையும் அங்கே ஆரம்பிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கெனவே விவசாயக் கல்லூரி இந்த ஜில்லாவுக்கு வந்திருக்கிறது. கால்நடை மருத்துவக் கல்லூரி எந்த ஜில்லாவில் வைக்கவேண்டும் என்பது பின்னால்தான் பரிசீலனை செய்யப்பட்டு, முடிவு எடுக்க வேண்டும். அதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாது.

MR. SPEAKER : I expect 13 or 14 supplementaries, one supplementary for each district.

[31st March 1964

திரு. கரு. சீமைச்சாமி : ஏதாவது புதியதாக கல்லூரி அல்லது வேறு தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்றால், நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் அந்தப் பிரச்னை இருக்காது. இதைப் பொறுத்தாவது அந்தக் கல்லூரியை அங்கு வைப்பதுபற்றி யோசிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இருக்கும் நிலைமையில் எந்தவிதமான இறுதி முடிவும் சொல்லிவிட முடியாது.

திரு. வை. சங்கரன் : பட்டிவீரம்பட்டியில் இதை வைப்பதற்கு மதுரை ஜில்லாவில் அங்கு இருக்கும் பிரமுகர்கள் நிலம் வகையறாக்கள் அளிப்பதற்கு முன்வந்திருப்பதை சர்க்கார் ஏற்றுக்கொண்டு, அங்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. அதைப்பற்றி பின்னால்தான் பரிசீலனை செய்யவேண்டும்.

ஊத்தங்கரை மருத்துவ மனை (விஸ்தரிப்பு)

*464. **கேள்வி—திரு. ம. கமலநாதன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊத்தங்கரை, சப்-தாலூகாவாக **(Sub-taluk)** இருப்பதால் அங்குள்ள மருத்துவ மனையை விஸ்தரிக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஊத்தங்கரையிலுள்ள பஞ்சாயத்து யூனியன் இங்கிலீஷ் மருந்தகத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை மருத்துவத்துறை டைரக்டர் யோசித்து வருகிறார்.

திரு. ம. கமலநாதன் : மாவட்ட மருத்துவ அதிகாரி தணிக்கை செய்கிற நேரத்தில் இந்த ஆஸ்பத்திரியில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய மாறுதல்களை அரசாங்கம் செய்வார்களா ? அல்லது பொதுமக்கள் செய்ய வேண்டுமா ? அல்லது பஞ்சாயத்து யூனியன் செய்ய வேண்டுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாவட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து சில 'ப்ரபோஸல்ஸ்' வந்திருக்கின்றன. அவைகளை பஞ்சாயத்து யூனியன் பொதுமக்களிடமிருந்து 'டொனேஷன்' வாங்கிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்து, அதைப்பற்றி ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டில் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : இந்த ஆஸ்பத்திரி மாவட்டக் கழகத்தினிடமிருந்து பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்பட்டதாகும். இதற்கு மருந்துகள் வாங்கிக் கொடுப்பதற்குக் கூட பஞ்சாயத்து யூனியனுக்கு ஓரளவுக்கு நிதி வசதி குறைவாக இருக்கிற காரணத்தினால், அரசாங்கமே இதை எடுத்துக்கொள்ளவேண்டும்